அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 44/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டின் 10 வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 18–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 18.06.2026 |
| பெயர் மைதிலி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. நான் பிரதிவாதியின் உறவினரா என்றால் இல்லை. எனது தந்தை எனக்கு செட்டில்மென்ட் எழுதிகொடுத்தாரா என்றால் எனது அம்மா ரமணி பெயரில் எழுதிகொடுத்தார். அந்த வா.சா.ஆ 1 செட்டில்மென்ட் பத்திரத்தில் எனது தந்தைக்கு எவ்வாறு தபசில் சொத்து பாத்தியப்பட்டது என்பது குறித்து எந்த பதிவும் இல்லை என்றால் சரிதான். எனது தாத்தா சொத்து ஆகும். எனது தந்தை செட்டில்மென்ட் பத்திரம் எழுதி 2 வருடம் கழித்து 2013 வருடத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த காலம் வரை எழுதிய செட்டில்மென்ட் குறித்து எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது அம்மா 2015 வருடத்தில் இறந்துவிட்டார். 2015 வரை

செட்டில்மென்ட் பத்திரம் சம்மந்தமாக எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் மனைவி பிரதிவாதி பெயரில் 2003 வருடத்தில் செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2003 வருடம் முதல் வா.சா.ஆ1 எழுதிய 2011 காலம் வரை பிரதிவாதியின் மனைவி எழுதிய செட்டில்மென்ட்சம்மந்தமாக எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி கேவியட் மனு பற்றிய அறிவிப்பு எனக்கு வந்ததா என்றால் தெரியாது.

3. தாவா சொத்தை அளந்து பார்க்க சர்வேயர் மூலமாக முயற்ச்சி எடுத்தோமா என்றால் எடுத்தேன். சர்வேயர் நீதிமன்ற மூலமாக வழக்கை நடத்த சொன்னார்கள். நான் அவ்வாறு சர்வேயர் மூலமாக அளக்க முற்பட்டது சம்மந்தமாக பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாசில்தார் அலுவலகத்தில் மனு எதுவும் செய்து அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிக்கிறார்கள் என்பதை காட்டும் புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராதில் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதற்கு பிரதிவாதி பதில் சொல்லவில்லை என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றாலும் பிரதிவாதி தரப்பில் பதில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல.

4. தாவா ஐட்டம் 2 சொத்தின் 4 எல்லை விவரங்கள் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. எல்லை விவரம் சரியாக இருந்திருந்தால் 4 எல்லைகளில் 1 எல்லையாக பிரதிவாதியின் சொத்து குறிப்பு இருந்திருக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 செட்டில்மென்ட் பத்திரத்தில் மேப் இல்லை என்றால் சரியல்ல மேப் உள்ளது. நிலவரி ரசீதில் நில அளவு குறிப்பு இல்லை என்றால் பொதுவாகவே நிலஅளவு குறிப்பு

ரசீதில் இருக்காது. mandatory injuction பரிகாரம் இந்த வழக்கில் நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராது விவரங்களை பிரதிவாதி முற்றுலும் மறுக்கிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது சொத்தில் தான் அனுபவதில் உள்ளார் என்றாலும் எனது சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.